# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை – 2020

**பாடம்:- சைவநெறி**

சுட்டெண்:....................... **தரம் – 10** **நேரம் : 03 மணி**

## பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. ஓம் என்னும் பிரணவரூப நாயனாக விளங்குபவர் யார்?
    1. சிவன் 2. விநாயகர் 3. முருகன் 4. விஸ்ணு

2. அன்பே சிவம் எனக் கூறியவர்
    1. திருமூலர் 2. திருவள்ளுவர் 3. சேந்தனார் 4. ஔவையார்

3. முதன் முதலில் பஞ்சாங்கம் தோற்றம் பெற்ற காலம்
    1. சங்ககாலம் 2. பல்லவர்காலம் 3. குப்தர்காலம் 4. சோழர்காலம்

4. இறைவனை சத், சித், ஆனந்தம் என்னும் மூன்று இயல்புகளினைக் கொண்டமையினால் எவ்வாறு அழைக்கப் படுகின்றார்?
    1. சாந்த சொரூபி 2. சச்சிதானந்த சொரூபி 3. சச்சியானந்தம் 4. சச்சிதானந்தரூபி

5. இறைவன் ஆன்மாக்களுக்காக தனு, கரணம், புவனம் போகம் என்பவற்றை உருவாக்குதல்
    1. காத்தல் 2. மறைத்தல் 3. அருளல் 4. படைத்தல்

6. "அரிது அரிது மானிடராதல் அரிது" எனக் கூறியவர்
    1. ஔவையார் 2. திருவள்ளுவர் 3. மாணிக்கவாசகர் 4. ஆறுமுக நாவலர்

7. ஆசாரம் என்பது
    1. நடைமுறை 2. ஒழுக்கம் 3. சைவவாழ்வு 4. பின்பற்றுதல்

8. வேதத்தின் இறுதிப்பகுதியாகவும் மிக ஆழமான ஆன்மீக உண்மைகளை விளக்கும் நூல்
    1. ஆகமம் 2. பிராமணங்கள் 3. உபநிடதம் 4. இதிகாசம்

9. திருமுறைகளின் தொகையும் பாடியோர் தொகையும்
    1. 12, 27 2. 10,27 3. 07,27 4. 08,27

10. பிரமபுரம் வேறு எப்பெயரால் அழைக்கப்படும்
    1. சீர்காழி 2. திருமருகல் 3. திருவாரூர் 4. திருவதிகை

11. உபாசன காண்டம் எனப்படுவது
    1. மந்திரங்கள் பற்றி கூறுகின்றது
    2. தியானத்துக்குரிய விடயங்களை உள்ளடக்கியதாகும்
    3. இது தத்துவ விடயங்களை உள்ளடக்கியதாகும்
    4. இது கிரியைகள் மத ஆசாரங்கள் பற்றி கூறுகின்றது

12. “அங்கமும் வேதமும்.....” பதிகம் பாடப்பட்ட தலம்
   1. திருக்கழுமலம்
   2. சிதம்பரம்
   3. திருப்புன்கூர்
   4. திருமருகலும் திருச்செங்காட்டங் குடியும்

13. மருணீக்கியார் என அழைக்கப்படும் நாயனார் யார்?
   1. சம்பந்தர் 2. திருநாவுக்கரசர் 3. சுந்தரர் 4. மாணிவாசகர்

14. எமது ஆன்மீக வாழ்வு மேம்படப் பெரிதும் உதவுவன
   1. விரதம் 2. நித்திய கிரியை 3. விழாக்கள் 4. புரரணப்படனம் செய்தல்

15. “நீறில்லா நெற்றி பாழ்.....” என்று கூறியவர் யார்?
   1. நக்கீரர் 2. ஔவையார் 3. பாரதியார் 4. சேந்தனார்

16. இறைவன் குடியிருக்கும் இடம் மட்டுமன்றி எமது பண்பாடுகள் வளர்க்கப்படும் இடமாகவும் கருதப்படுவது.
   1. பாடசாலை 2. குடிமனைகள் 3. ஆச்சிரமங்கள் 4. கோயில்கள்

17. “குனித்த புருவமும் கொவ்வைச் ......” உணர்த்தும் வடிவம்
   1. தூக்கிய திருவடி 2. நடராஜர் வடிவம் 3. சிவலிங்கம் 4. அர்த்தநாரீசுவர்

18. வேதம் என்ற சொல்லின் பொருள்
   1. சிறப்பு 2. அறிவு 3. வெளிச்சம் 4. பொது

19. வசிட்டமா முனிவரின் மனைவி யார்?
   1. காளி 2. அருந்ததி 3. திரௌபதை 4. சீதா

20. யாகங்களின் போது மேற்கொள்ள வேண்டிய சடங்கு முறைகளை விளக்குவன
   1. மந்திரங்கள் 2. ஆரணியங்கள் 3. பிராமணங்கள் 4. சங்கிதைகள்

21. திரிகரணங்கள் எவை?
   1. பதி,பசு, பாசம்
   2. ஆணவம், கன்மம், மாயை
   3. மனம், வாக்கு, காயம்
   4. சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்

22. பூர்வக்கிரியைகளில் ஒன்று
   1. ஈமக்கிரியை 2. அந்தியேட்டி 3. சிரார்த்தம் 4. ஏடுதொடக்குதல்

23. பிரமச்சரிய நிலையில் இருந்து ஒருவரை இல்லறத்துக்கு புக அங்கீகரிக்கும் சடங்கு
   1. திருமணச்சடங்கு 2. மகாளயம் 3. மரணச்சடங்கு 4. பூப்புனித நீராட்டு விழா

24. சூரியன் மேட இராசியில் பிரவேசிக்கும் நாள்
   1. தைப்பொங்கல் 2. தீபாவளி 3. ஆடிப்பிறப்பு 4. சித்திரை வருடப்பிறப்பு

25. பூரணையை இறுதி நாளாகக் கொண்டு மாதத்தைக் கணிக்கும் முறை
   1. அமாந்த முறை 2. சந்திர மானம் 3. சூரிய மானம் 4. பூர்ணி மாந்த முறை

26. “நல்லவர்களை காத்து, தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் காலம் தோறும் நான் தோன்றுகிறேன்” எனக் கூறியவர்.
1. கிருஸ்ணர் 2. விநாயகர் 3. முருகன் 4. அரிச்சந்திரன்

27. “இந்த சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்” எனக் கூறியவர்
1. ஔவையார் 2. திருமூலர் 3. ஆறுமுக நாவலர் 4. திருவள்ளுவர்

28. தீபாவளிப் பண்டிகையில் தவிர்க்க வேண்டியது
1. கள்ளுண்ணல் 2. வீட்டில் மாவிளக்கு ஏற்றுதல்
3. எண்ணெய் தேய்த்து நீராடுதல் 4. புதிய பொருட்களை வாங்குதல்

29. சைவசமயிகளாக நாம் தினமும் தரிக்க வேண்டியது
1. மஞ்சள் 2. விபூதி 3. குங்குமம் 4. சந்தனம்

30. ஆன்மாக்களின் இறுதி இலட்சியம்
1. வீடுபேறு 2. இறைவனை வழிபடல் 3. இறைதொண்டு புரிதல் 4. கிரியைத் தொண்டு

31. பஞ்சாங்கத்தில் இடம்பெறும் நட்சத்திரங்கள் எத்தனை?
1. 18 2. 36 3. 27 4. 28

32. இறைவனை பல்லாண்டு வாழ்க எனப் போற்றிப் பாடுவது
1. திருப்பல்லாண்டு 2. தேவாரம் 3. திருவாசகம் 4. திருவிசைப்பா

33. எமது கண்கண்ட தெய்வங்களாக விளங்குபவர் யார்?
1. சிவன், சக்தி 2. மாதா, பிதா 3. இறைவன், ஆன்மா 4. உறவினர், அயலவர்

34. எழுதாமறை எனப்படுவது எது?
1. வேதம் 2. ஆகமம் 3. புராணம் 4. உபநிடதம்

35. வேதங்களைத் தொகுத்தவர் யார்?
1. வான்மீகி 2. வியாசர் 3. வில்லிபுத்தூர் ஆழ்வார் 4. புகழேந்தி

36. திருமந்திரத்திலுள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது?
1. 3000 2. 2900 3. 3400 4. 3200

கீழ்வரும் அட்டவனையைப் பயன்படுத்தி 37, 38, 39, 40 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| சைவ நாயன்மார் | சமூகப்பணி | நின்ற நெறி |
|---|---|---|
| A திருஞான சம்பந்தர் | E முதலையுண்ட சிறுவனை மீட்டமை | I சரியை |
| B திருநாவுக்கரசர் | F நரிகளை பரிகளாக்கியமை | J ஞானம் |
| C சுந்தரர் | G இறந்தவரை உயிர்ப்பித்தமை | K கிரியை |
| D மாணிக்கவாசகர் | H முயலகன் நோயை நீக்கியமை | L யோகம் |

37. ஆளுடைய பிள்ளயாருடன் தொடர்புடைய தொகுதி எது?

1. AHL　2. BEJ　3. CGL　4. DKI

38. திருநாவுக்கரசரசருடன் தொடர்புடைய தொகுதி எது?

1. BGI　2. AEJ　3. DKI　4. CKL

39. சுந்தரமூர்த்தி நாயனாருடன் தொடர்புடைய தொகுதி எது?

1. CFK　2. CHJ　3. CEL　4. AFL

40. மாணிக்கவாசகருடன் தொடர்புடைய தொகுதி எது?

1.CHK　2. DFJ　3. DEK　4. DFI

(40X1=40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01.**

1. கடவுள் என்பதன் பொருள் யாது?
2. அட்டபுஸ்பங்களும் எவை?
3. காலக்கணிப்புக்கு உதவுபவை எவை?
4. வாய்மையைப் பேணி வாழ்ந்த பெரியோர் யாவர்?
5. திருநீறு தரிக்கும் பிதான முறைகள் எவை?
6. பாடசாலையில் இடம்பெறும் இறைசிந்தனை கூடிய நிகழ்வுகள் 02 தருக.
7. புற ஆசாரத்திற்குரிய செயல்கள் 02 தருக.
8. சூரியமானம் என்றால் என்ன?
9. இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் எவை?
10. எமது பிறப்பின் நோக்கம் யாது?

(10X2=20 புள்ளிகள்)

**02.** பின்வரும் பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதி அவற்றின் பண், தலம், பாடியவர், பொருள் என்பவற்றை எழுதுக.

1. உற்றுமை சேர்வது மெய்யினையே .....
2. குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் .....
3. நாமார்க்கு குடியல் லோம்........
4. அங்கமும் வேதமும் .......

(5X2=10 புள்ளிகள்)

**03.** "சைவ மக்கள் வாழ்வை நெறிப்படுத்துவன விரதங்கள்"

1. விநாயகருக்கு உரிய விரதங்கள் எவை? விநாயகர் சஷ்டி விரதம் அனுஸ்ரிக்கும் காலத்தைத் தருக.
2. கந்த சஷ்டி விரதம் விளக்கும் தத்துவம் யாது?
3. விரதம் அனுஸ்டிப்பதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?

(2+4+4=10 புள்ளி)

**04.** "பண்பாட்டினை பிரதிபலிக்கும் சடங்குகளில் ஒன்றே திருமணச்சடங்கு ஆகும்"

1. பூர்வக்கிரியைகளுக்கு 04 உதாரணம் தருக.
2. கன்னிகா தானம் எனப்படுவது யாது?
3. திருமணக் கிரியையில் இடம்பெறும் முக்கிய சம்பிர தாயங்கள் எவை?

(2+4+4= 10 புள்ளி)

**05.** " வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்"

1. வேதம் என்பதன் பொருள் யாது? வேதத்தின் மறுபெயர்கள் எவை?
2. வேதத்தின் பிரிவுகள் எத்தனை? அவை எவை?
3. யசுர் வேதம் எவற்றை விளக்குகிறது?

(2+4+4= 10 புள்ளி)

**06.** "வருடத்தின் குறிப்பிட்ட நாள் விருந்துடன் கொண்டாடப்படுவது பண்டிகை"

1. தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்புடைய அசுரன் விஸ்னுவிடம் வேண்டியவற்றை எழுதுக.
2. தீபாவளிப் பண்டிகை தினத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கருமங்கள் எவை?
3. தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படும் நாள் எது? இந் நாளில் தவிர்க்க வேண்டியவற்றை எழுதுக.

(2+4+4= 10 புள்ளி)

**07.** பின்வருவனவற்றுள் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1. அற உணர்வு
2. வாய்மை
3. பஞ்சாங்கம்
4. புரட்டாதிச் சனி
5. இருக்கு வேதம்

(5X2= 10 புள்ளி)